**மதுவரி வெகுமதி நிதியம் - 2019**

-----------------------------------------------------------------

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மதுவரி வெகுமதி நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, மதுவரி வெகுமதி நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, மதுவரி வெகுமதி நிதியத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மதுவரி வெகுமதி நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2019 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மதுவரி வெகுமதி நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது

நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் விடயப் பரப்பு விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் இணங்கியிருந்தது என்பதும்,

- நிதியம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தன என்பதும்,

- நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தன என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களின் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், உரிய நிதியிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கறிக்கையை பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களுக்கு பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களித்தகைமை பேணப்பட்டு சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் ஒப்பிடல் மற்றும் வேறுபாடுகள் காணப்படுமாயின் அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றுக்காக நியாயமான உறுதிப்பாடொன்றை பெற்றுக்கொள்ள போதியளவான ‘‘சிறந்த முறையில் திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்றினை நிறுவனத்தினால் நடாத்திச் செல்லப்படல் அவசியமானதாகும். பொதுப் பேரேடு, நாட்குறிப்பு, நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற பிரதான கணக்கீட்டு

அறிக்கைகளை பேணிச் செல்லல் தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வரும் தலைப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 1.5.2 இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடன் தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 | | |
| ரூபா 47,134,000 பெறுமதியுடைய கட்டிடம் நிதி நிலைமைக் கூற்றில் காணிகள் மற்றும் கட்டிடங்களாகக் காட்டப்பட்டிருந்த போதும் அது கட்டிடத்தின் பெறுமதி மாத்திரமாக இருந்தது. எவ்வாறாயினும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் கட்டிடம் அமையப்பெற்றிருந்த காணி, மீளாய்வாண்டு வரையிலும் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | பிரதேச செயலாளர்களிடமிருந்து கையேற்கப்பட்ட காணி மீள் மதிப்பீட்டின் பின்னர் புத்தகங்களுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் | கட்டிடம் அமைந்துள்ள காணியின் உரித்தினை உறுதிப்படுத்தி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்தல் |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திணைக்களத்திடமிருந்து கிடைக்க வேண்டிய இணக்கக கட்டணங்கள் மற்றும் தண்டபண வருமானத்திலிருந்து திரட்டு நிதியத்திற்கு செலுத்த வேண்டிய முறையே ரூபா 8,186,592 மற்றும் ரூபா 653,325 தொகை செலுத்த வேண்டிய வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அடுத்த ஆண்டில் கணக்குகளைத் தயாரிக்கும் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அட்டுறு அடிப்படையில் கணக்குகள் தயாரிப்பதற்கு தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ளல் |

### 1.5.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திறைசேரி அச்சீட்டுக் குறிப்பின் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரிய இணக்கக் கட்டணங்கள் பெறுவனவு மற்றும் சிகரட்டுக்கள் மீதான அபராதங்கள் கிடைப்பனவு என்பவற்றின் கூட்டுத்தொகை ரூபா 256,749,152 ஆக இருந்ததுடன் மாதாந்த கணக்கு பொழிப்பின் | பிராந்திய அலுவலகங்களினால் உழைக்கும் இணக்க கட்டண அறவீகள் தவறுதலாக பொது வைப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டதால் இடம்பெற்றுள்ளது. | திறைசேரி அச்சீட்டுக் குறிப்பு மற்றும் மாதாந்த பொழிப்பிற்கு இடையே ஒப்பீடு செய்ய நடவடிக்கை எடுத்தல். |

பிரகாரம் அது ரூபா 256,525,852 ஆக இருந்தமையால் ரூபா 223,300 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 1.5.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதி நிலைமைக் கூற்றில் மொத்தம் ரூபா 72,393,098 தொகையான நிலையான சொத்துக்களுக்காக மெய்மையாய்வு சபை அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. | வெகுமதி நிதியத்தின் சொத்துக்கள் தொடர்பாக புறம்பான பதிவேடொன்றை பேணுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப் பட்டுள்ளன. அதன் பிரகாரம் பொருள் மெய்மையாய்வு சபை அறிக்கை எதிர்வரும் காலங்களில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிய தருகின்றேன். | கட்டிடம் அமைந்துள்ள காணியின் உரித்தினை உறுதிப்படுத்தி முறையாக மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கும் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் பொருள் மெய்மையாய்வினை மேற்கொள்ளல் |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

(அ) மீளாய்வாண்டின் தொழிற்பாட்டு விளைவுகள் ரூபா 160,411,245 தொகையான பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 36,759,028 ஆக இருந்தது, அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 197,170,273 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 262,001,814 அளவினால் அல்லது 258 சதவீதத்தினால் வெகுமதி நிதியக் கொடுப்பனவு அதிகரித்தமை இவ்வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது. மதுவரி வெகுமதி நிதியத்திற்காக கிடைக்கும் வருமானத்தை கருத்திற் கொள்ளாமல் முறையான அங்கீகாரமின்றியும் சட்டரீதியற்ற வகையிலும் திணைக்களத்தின் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் மீளாய்வாண்டில் 09 மாத சம்பளத்தை வெகுமதி தொகையாக செலுத்தியிருந்தமை இவ்வீழ்ச்சியை நிரூபணமாக்குகின்றது.

(ஆ) மதுவரி வெகுமதி நிதியத்தின் தேறிய சொத்துக்கள் மீதி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 160,411,245 ஆலும் காசுப் பாய்ச்சல் கூற்றில் ஆண்டின் இறுதியில் காசு மீதி ரூபா 214,749,066 ஆல் வீழ்ச்சியடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1994 மார்ச் திகதிய 818 ஆம் இலக்க மதுவரி அறிவிப்பின் பிரகாரம் தாபிக்கப்பட்டுள்ள மதுவரி வெகுமதி நிதியத்தின நோக்கங்களை நிறைவேற்றல் பின்வருமாறு இருந்தன. | | |
| (i) | உத்தியோகத்தர்களின் பயிற்சி மற்றும் கல்வி நடவடிக்கைகளுக்கான திட்டமொன்றின் மீது அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாது அச்செயலாற்றலுக்காக மீளாய்வாண்டில் அவற்றின் மீது ரூபா 2,500,000 தொகையொன்று ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் எவ்வித பயிற்சி செயற்பாடுகளும் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் முன்னைய ஆண்டிலும் அதே செயற்பாட்டிற்காக ரூபா 2.5 மில்லியன் அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாடும் முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. | உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளிப்பதற்கு முறையான திட்டமொன்று தயாரிக்கப் படாதிருந்ததுடன் திட்டமிடப்பட்ட பாடநெறிகள் தவிர்க்க முடியாத காரணங்களினால் நடாத்தப்படாமை, விரிவுரை யாளர்களுக்காக விரிவுரைக் கட்டணங்கள் கொடுப்பனவு செய்வதற்கு அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள முடியாமை போன்ற காரணங்களினால் இப்பணம் சேமிக்கப்பட்டது. எதிர்வரும் காலங்களில் இவ்வாறான குறைபாடுகளை தவிர்தது சரிசெய்வதற்கும் திட்டமிட்டு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | உத்தியோகத்தர்களின் செயற்திறனை முன்னேற்றும் பொருட்டு வருடாந்தம் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படல் மற்றும் நடைமுறைச் சாத்தியமான மதிப்பீடுகளை மேற்கொள்ளல். |

(ii) நிதியத்தின் நோக்கமொன்றான பாரட்டத்தக்க வேலைகள், உள்ளத்துணிவு செயற்பாடுகள், பொழுதுபோக்கு மற்றும் விசேட ஏற்றுக்கொள்ளல்கள் என்பவற்றிற்காக ரூபா 200,000 தொகைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் இந்த ஒதுக்கீடு முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது.

உள்ளத்துணிவு மற்றும் பராட்டத்தக்க வேலைகளுடன் தொடர்புடைய ஏதேனும் விசேட செயற்பாடுகள் 2019 ஆம் ஆண்டில் அறிக்கையிடப் படாதிருந்ததுடன் விசேட கடமைகள் மற்றும் விசேட சுற்றிவளைப்பிற்காக 2019 ஆம் ஆண்டில் ரூபா 210,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதாக தயவுடன் அறிய தருகின்றேன்

நிதியத்தின் நோக்கங்கள் தொடர்பாக போதிய கவனத்தை செலுத்துதல் மற்றும் யதார்த்தமான அடிப்படையொன்றில் மதிப்பீடுகளினைத் தயாரித்தல்

(iii) சமர்ப்பிக்கப்பட்ட செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டுகளிலும் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளவாறாகும்.

| **ஆண்டு** | **சுற்றி வளைப்புக்கள் எண்ணிக்கை** | **முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக குறைவு** |
|---|---|---|
| 2019 | 3623 | 61 |
| 2018 | 3684 | 631 |
| 2017 | 4315 | 278 |
| 2016 | 4593 | 339 |
| 2015 | 4932 | 387 |

முன்னைய ஆண்டின் போது சுற்றி வளைப்புக்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் கிடைக்கும் தண்டப்பணத்தை அடிப்படையாக கொண்டு வெகுமதி தொகைகள் செலுத்தப்பட்டு வந்த போதும் மீளாய்வாண்டின் போது அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் வருகையை அடிப்படையாக கொண்டு ஆரம்ப சம்பளத்தில் 75 சதவீதம் கொடுப்பனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது, இதன் காரணமாக 2019 ஆம் ஆண்டில் தொழில்நுட்ப குற்ற சுற்றி வளைப்புக்கள் குறைவடைந்துள்ளன என அவதானிக்கப்பட்டது.

மதுவரி உத்தியோகத்தர் களால் அனுமதிப்பத்திர இடங்கள் அவ்வப்போது மேற்பார்வை செய்யப்பட்டு முறையான கட்டுப்பாட்டுடன் சட்டரீதியான கட்டமைப்பினுள் அச்செயற்பாட்டினை மேற்கொள்வதற்கு அனுமதிப்பத்திரதாரிகளை தொடர்புபடுத்தியதால் தொழில்நுட்ப குற்றங்கள் குறைவதற்கு அவை காரணமாக இருந்தன. ஆதலால் மதுவரி அனுமதிப்பத்திர இடங்களில் இடம்பெறும் மதுவரி அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறுவதில் குறைவொன்று அவதானிக்கப்பட்டது. இதனால் தொழில்நுட்ப சுற்றி வளைப்புக்கள் குறைவடைந்துள்ளன.

அனுமதிப்பத்திர இடங்கள் தொடர்பாக தொடர்ச்சியான முறையான பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| (iv) | மதுவரி, அறிவிப்பின் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையின் 7 ஆம் பந்தியின் பிரகாரம் இணக்க கட்டணங்கள் பெறுவனவின் மூலம் வெகுமதி கொடுப்பனவிற்காக 75 சதவீதமான அளவுக்கு மாத்திரம் உரித்து கிடைக்கின்றது. எனினும் மீளாய்வாண்டின் யூலை மாதம் முதல் திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் இணக்க கட்டணங்கள் பெறுவனவு ரூபா 114,250,126 ஆக இருந்த போதும் வெகுமதி தொகை கொடுப்பனவு ரூபா 290,096,694 ஆக இருந்தமையால் இணக்க கட்டணங்கள் பெறுவனவை மிகைத்து ரூபா 175,846,568 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | திணைக்களத்தில் கடமை புரியும் அனைத்த உத்தியோகத்தர்களுக்கும் படிகள் கொடுப்பனவிற்காக அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று தயாரிக்கப்பட்டு அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் பொது திறைசேரிக்கு அறிவிக்கப்பட்டதன் பின்னர் இப்படிகள் கொடுப்பனவு செவய்யப்பட்டுள்ளன. | 818 ஆம் இலக்க மதுவரி அறிவிப்பின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். |
| (ஆ) | 2011 ஆகஸ்ட் 01 ஆந் திகதிய 3/2011 ஆம் இலக்க தொழில்நுட்ப குற்றங்கள் தொடர்பான மதுவரி சுற்றறிக்கையின் பிரகாரம் நடுவர் தீர்ப்புக் கட்டணங்கள் அறவீடு வீச்சின் பிரகாரம் மீளாய்வாண்டில் மொத்த சம்பவங்கள் (சுற்றி வளைப்புக்கள்) எண்ணிக்கையில் 72 சதவீதமான அளவில் பொதுவான தவறுகள் தொடர்பாக இருந்ததுடன் பிரதான வகைக்குரிய நிபந்தனைகள் மீறல் தொடர்பாக 28 சதவீதமான குறைந்த பெறுமதியை கொண்டிருந்தது, | மேற்பார்வை உத்தியோகத்தர்கள் கூடுதலாக ஈடுபடுத்தி மற்றும் புதிய சுற்றறிக்கை மூலம் நடுவர் கட்டணங்கள் அளவினை அதிகரித்ததன் ஊடாக அனுமதிப்பத்திர இடங்களில் செய்யப்படும் தவறுகள் குறைவடைந்தமை, உத்தியோகத்தர்களின் செயற்திறன் உயர்மட்டத்தில் காணப்படுவதால் இக்குறைவின் போக்கை அறிந்து கொள்ளலாம் | உயர்மட்ட உத்தியோகத்தர்களால் எழுமாதிரியாக தெரிவு செய்து அனுமதிப்பத்திர இடங்கள் பரீட்சிப்பிற்கு உள்ளாக்குவதற்கு நடவடிக்கை எடுத்ததன் மூலம் தவறுகள் இல்லையென்பதனை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் |
| (இ) | 1999 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க புகையிலை வரிச் சட்டத்தின் 17(அ), I மற்றும் II ஆம் பிரிவின் பிரகாரம் பெறப்பட்ட அபராதங்களின் 25 சதவீதத்திலிருந்து புகையிலை வெகுமதி நிதியமொன்றை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதும் 2019 திசெம்பர் 31 வரையிலும் அவ்வாறான நிதியமொன்றை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | புகையிலை வெகுமதி நிதியமொன்றை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கைகள் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றது. | ஏற்பாடுகளின் பிரகாரம் புகையிலை வெகுமதி நிதியமொன்றை ஸ்தாபித்தல். |

**3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் மீது வருடாந்தம் பெறுமானத் தேய்விடப்பட்டிருந்த தொகைக்குச் சமமான தொகையொன்று, திறைசேரியின் பெறுமானத்தேய்வு ஒதுக்க நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அந் நிதியத்தின் மீதி ரூபா 56,284,583 ஆக காணப்பட்ட போதும் குறித்த நிதியத்தை வினைத்திறனான செயற்பாடுகளுக்காக பயன்படுத்துவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் பெறுமானத்தேய்வு ஒதுக்க நிதியத்தின் மீதியை வினைத்திறனாகப் பயன்படுத்துவதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளனன. | பெறுமானத்தேய்வு ஒதுக்க நிதியத்தினை வினைத்திறனாக பயன்படுத்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மதுவரி வெகுமதி நிதியத்திற்காக கிடைக்கும் வருமானத்தை கருத்திற் கொள்ளாமல் முறையான அங்கீகாரமின்றியும் சட்டரீதியற்ற வகையிலும் திணைக்களத்தின் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் மீளாய்வாண்டில் 09 மாத சம்பளத்தை வெகுமதியாக செலுத்தப்படதன் காரணமாக முன்னைய ஆண்டில் ரூபா 36,759,028 ஆக காணப்பட்ட நிதியத்தின் மிகை மீளாய்வாண்டின் போது ரூபா 160,411,245 ஆன பற்றாக்குறையொன்றாக மாறியிருந்தது அது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 258 சதவீத வீழ்ச்சியொன்றாகும். | இவ்வாறு கொடுப்பனவு செய்வதற்காக அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் நிர்வாக குழுவின் அங்கீகாரத்தின் பேரில் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. | 818 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் மற்றும் உரிய நடைமுறைகளை முறையாக மீளாய்வு செய்தல். |
| (இ) | 1994 மார்ச் 04 ஆந் திகதிய 818 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலின் பிரகாரம் நடுவர் கட்டண பெறுவனவு மற்றும் வெகுமதி கொடுப்பனவு 4:3 ஆக இருக்க வேண்டிய போதிலும் திருத்திய மதிப்பீட்டின் பிரகாரம் அது 1 : 1.92 என்ற விகிதமொன்றாக அசாதாரண நிலைமையொன்றை உருவாக்கியிருந்தமையால் மதுவரி அறிவித்தலுக்கு முரணாக செயற்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது. | திணைக்களத்தில் கடமை புரியும் அனைத்து உத்தியோகத்தர் களுக்கும் படிகள் கொடுப்பனவு செய்வதற்காக நடவடிக்கை எடுத்த காரணத்தினால் இவ்வாறு மதிப்பீட்டினை இரண்டு முறை திருத்தம் செய்தற்கு நடவடிக்கை எடுத்ததாக தயவுடன் அறியத் தருகின்றேன். | மதிப்பீடுகளை தயாரிக்கும் போது திட்டமிடல் மற்றும் யதார்த்த ரீதியிலும் உரிய நடைமுறையின் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஈ) 1994 மார்ச் 04 ஆந் திகதிய 818 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலின் அமுல்படுத்தப்பட்டு 2019 ஆம் ஆண்டு வரை 25 வருடங்களுக்கும் அதிகமான காலம் கடந்திருந்ததுடன், திணைக்களத்தின் தற்போதைய பதவியணியில் அந்தந்த தரங்களின் பதவிகள் மற்றும் கடமைகளில் பல்வேறு வேறுபாடுகள் இடம்பெற்றிருந்தன. அதன் பிரகாரம் திணைக்களத்தின் கடமைகளில் விரிவாக்கத்தை கருத்திற் கொண்டு இம்மதுவரி அறிவித்தலை திருத்தம் செய்வதற்கு பொறுப்பு வாய்ந்த தரப்பினரின் கவனம் செலுத்தியதாக அவதானிக்கப்படவில்லை. மேலும் சட்ட விரோத செயற்பாடுகள் காரணமாக அரச வருமானத்திற்கு இடம்பெறும் பாதகமான தாக்கத்தை குறைக்கும் வகையில் இவ்வெகுமதி முறைமையை மேம்படுத்துவதற்கு ஆவணரீதியான முறைமையொன்றாக அங்கீகரித்துக் கொள்ள வேண்டுமென்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | தற்போது 1994 மார்ச் 01 ஆந் திகதிய 818 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலினை மீளமைப்பது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | மதுவரி அறிவித்தலினை முறையாக மீளமைக்க வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நான்கு செலவின விடயங்கள் தொடர்பில் மதிப்பிடப்பட்ட ரூபா 39,700,000 பெறுமதியான தொகை முழுமையாக சேமிக்கப்பட்டதாக அவதானிக்கப்பட்டதால், பாதீடானது வினைத்திறனான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டுள்ளதாக என அவதானிக்கப்படவில்லை. | பாதீட்டிலுள்ள வேறுபாடுகளினை இயலுமான வரை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பாதீடு திட்டமிடப்பட்டு முறையாகவும் யதார்த்தமானதாக குறித்துரைக் கப்பட்ட காலப்பகுதியில் தயாரித்து அதன் பிரகாரம் செயற்படல் வேண்டும். |